# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## SOC 3.15 – INTRODUCTION TO CRIMINOLOGY

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. குற்றம் (Crime) எனும் பதத்தை விளக்குவதுடன் அது எவ்வாறு சமூகத்தையும் அதன் உறுப்பினர்களையும் பாதிப்படையச் செய்கின்றது என்பது பற்றி ஆராய்க.

02. “தற்கால ஊடகங்களின் செயற்பாடுகள் ஆரோக்கியமான சமூகமொன்றினை (Just Society) கட்டியெழுப்புவதற்குப் பதிலாக குற்ற நடவடிக்கைகளைக் கவரும் பரம்பரையொன்றை உருவாக்கி வருகின்றன.” இக்கூற்றை விமர்சனரீதியாக ஆராய்க.

03. “குற்றவாளிகள் பிறப்பதில்லை. சமூகத்தினால் அவர்கள் உருவாக்கப் படுகின்றார்கள்” என்னும் சமூகவியலாளர்களின் இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அவ்வாறாயின் பொருத்தமான ஆதாரங்களைத் தந்து விளக்குக.

04. “ஊழல் மற்றும் இலஞ்சம் என்னும் சமூக விரோத குற்றச் செயல்கள் எமது நாட்டு மக்களிடையே வேரூன்றிய பண்புகளாக மாறிவிட்டன.” இக்கூற்றினைப் பரிசீலனை செய்க.

05. “இஸ்லாமிய குற்றவியல் சட்டம் மானிட சமூகங்களுக்கிடையில் நீதியையும் ஒழுங்கையும் நிரந்தரமாக நிலைபெறச் செய்கின்றதே தவிர, மேற்கத்திய சமூகம் விமர்சிப்பது போன்று கொடூரமானதொன்றல்ல.” இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அவ்வாறாயின் உமது விடையை நியாயப்படுத்துக.

06. தற்போதைய நாகரீக சமூகத்திற்கு ஏற்றதாக நீதி முறையான மரணதண்டனையின் நிறைவேற்றம் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாக அமைந்துள்ளதா? தகுந்த காரணங்களுடன் ஆராய்க.

07. எமது நாட்டில் குற்றவியல் நீதிமன்றங்களின் நியாயாதிக்கமும் செயற்பாடுகளும் குற்றச் செயற்பாடுகளை முழு அளவில் கட்டுப்படுத்துகின்றனவா? தகுந்த ஆதாரங்களுடன் வாதிடுக.

08. கீழ்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பெழுதுக.

    (அ) நீதிமன்றங்களின் பிணை வழங்கல் தத்துவம்

    (ஆ) எமது நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள குவாசி நீதிமன்றங்கள்

    (இ) குற்றமனம் (Mensreus) மற்றும் குற்றச்செயல் (Actus reus)

***